நரி கதை

யோசி அபோலாஃபியா
மொழிபெயர்ப்பு: பூர்வா யாக்னிக் குஷ்வாஹா



நரி கதை



எழுதி விளக்கியவர்: யோசி அபோலாஃபியா

மொழிபெயர்ப்பு: பூர்வா யாக்னிக் குஷ்வாஹா



இடாமருக்கு

- ஒய்.ஏ.



கரடி புட்டியிலிருந்து தேனை நக்கிக்கொண்டு காட்டில் மகிழ்ச்சியாக நடந்து கொண்டிருந்தது.

இரண்டு பேராசை கொண்ட கண்கள் புதரின் பின்னிருந்து அதை பார்த்துக் கொண்டிருந்தன.

" ஏய் ஸ்டம்பி!" நரி கரடியைக் கூப்பிட்டது.

" நீ என்னை என்னன்னு கூப்பிட்ட? " கரடி கேட்டது.

" ஸ்டம்பி ," என்றது நரி. “அப்படித்தான் உன் முதுகுக்குப் பின் எல்லோரும் அழைக்கிறார்கள்."

" உண்மையாவா ?" என்றது கரடி.

" எப்போதும்!" என்றது நரி , " ஏனென்றால் உனக்கு வால் இல்லை."





" எனக்கு வால் இருக்கிறது " என்றது கரடி.

" சரி , எல்லாருடைய வாலும் உன்னுடையதை விட சிறந்தது .“ என்றது நரி. "ஆனால் உனக்கும் ஒரு அழகான வால் இருக்க முடியும்"

" உண்மையாகவா?" என்று கரடி கேட்டது.

" என் அழகான அடர்ந்த வாலை உன் பாதி காலியான தேன் புட்டிக்கு ஈடாக நான் தருவேன் ," என்று நரி சொன்னது.

" ஆனால் நான் எப்படி உன் வாலை என்னுடன் எடுத்துச் செல்வது ?“ என்று கரடி கேட்டது.

" நீ அதை எடுத்துச்செல்ல வேண்டியதில்லை , நான் உனக்காக வைத்துக்கொள்கிறேன்," என்றது நரி. “அதை எவ்வளவு சிறப்பாக பராமரிக்கிறேன் என்று தெரிகிறதல்லவா."

" ஆனால் அது என்னுடையது என்று பிறருக்கு எப்படி தெரியும்?" என்று கரடி கேட்டது.

" நான் அதில் ஒரு குறி தொங்க விடுவேன்" என்றது நரி.

" நீ அருகில் இல்லாத போது என்ன செய்வது ?" என்று கரடி கேட்டது.

" நான் உனக்கு ஒரு கடிதம் தருகிறேன் ," என்றது நரி.
"ஒரு உத்தரவாதம்! அல்லது உன் தேன் திரும்பக் கிடைக்கும்."





இதற்கிடையில், ஆற்றின் கீழே சிறிது தூரம் சென்ற போது, சில விலங்குகள் மதியம் தேநீர் அருந்திக் கொண்டிருந்தன.

அவை தந்திரமான நரியைப் பற்றி மும்முரமாக விவாதித்துக்கொண்டிருந்தன.

“ஒரு நாள் நான் மரக்கிளையில் அமர்ந்து மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்” என்றது காகம். அப்போது அங்கு வந்த நரி சொன்னது,”உன் போன்ற அழகிய பறவையின் குரல் இனிமையாகத்தான் இருக்கும்.” நான் பாடுவதற்காக என் வாயைத் திறந்து, அருமையான சீஸ் துண்டை கீழே போட்டேன். நரி என் சீஸை எடுத்துக்கொண்டு என் பாட்டு நாராசம் என்று சொல்லிச் சென்றது.”





“என் இனிப்பான பழுத்த திராட்சைப்பழங்களுக்கு பதில் நரி புளித்த பழங்களை தந்துவிட்டு போனதில் உண்டான தசைப்பிடிப்பு இன்னும் எனக்கு இருக்கிறது” என்று முயல் சொன்னது. “புளித்த திராட்சையில் விட்டமின் சி நிறைந்துள்ளது” என்று சொன்னது நரி.”



“அன்றொரு நாள் செஸ்ட்நட் பொறுக்கிக்கொண்டிருந்தேன்.” என்றது கழுதை. “அப்போது நரி வந்து உதவுவதாகச் சொன்னது. நீ பெரியவனாக இருப்பதால், உனக்கு தான் பெரிய மூட்டை” என்று சொன்னது. பெரிய மூட்டையை சுமந்துகொண்டு வீட்டுக்குப் போனால் அது முழுவதும் பாறைகள்.”



அப்போது பரபரப்பாக அங்கு கரடி வந்தது.

" இப்போது நீங்கள் என்னைக் கேலி செய்ய முடியாது ."

"ஏனென்றால் இப்போது எனக்கும் அழகான அடர்ந்த வால் இருக்கிறது ," என்று கரடி அறிவித்தது.

" உன்னை யார் கேலி செய்கிறார்கள் ?" மேலும் "நீ எந்த வாலைப் பத்திப் பேசுகிறாய் ?" என்று விலங்குகள் கேட்டன.

கரடி நரி எழுதிய கடிதத்தை அவர்களிடம் காட்டியது.

" எங்கள் குழுவிற்கு நல்வரவு!" என்றது கழுதை.

" அவன் உன்னிடமிருந்து என்ன பிடுங்கினான்?"

" என் தேன் ," என்றது கரடி





" உன் குட்டை வாலில் அந்த துண்டுப்பிரசுரத்தை அசைத்துக்கொண்டே இரு. ஏனெனில் நரி ஒருபோதும் தன் வாலைப் பிரியாது ," என்று முயல் சொன்னது.

" நண்பர்களே, நரிக்குப் பாடம் கற்பிக்க வேண்டிய நேரம் இது ," என்று காகம் சொன்னது.

" ஆனால் எப்படி ?" என்று கரடி கேட்டது.

" எனக்குத் தெரியும் ," என்று காகம் பதிலளித்தது.

"அவனுடைய வால் உன்னுடையது என்று நீ அவனுக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும்."

" நான் உடனே போகிறேன் " என்றது கரடி.

" பொறு ," என்றது காகம் , " நாம் சேர்ந்து போவோம். ஆனால் இன்றிரவு. நேரம் கழித்து."



நள்ளிரவு. நரி தன் குகையில் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. "இந்த இரவில் யார் அங்கே இருக்க முடியும் ?" என்று அது யோசித்தது.



" நான்தான் ," என்றது கரடி. "என் நண்பர்களுக்கு என் வாலைக் காட்ட கூட்டி வந்திருக்கிறேன்."

" இந்த நேரத்திலா?" நரி முணுமுணுத்தது. "காலை வரைக்கும் காத்திருக்க முடியாதா?"



" சில நிமிடங்கள்தான் ஆகும்," என்றது கரடி.

" சரி ," என்று நரி பதிலளித்தது. "ஆனால் சீக்கிரம் பார்த்துவிட்டு தொலைந்து போ. எனக்கு இன்னும் நிறைய தூங்க வேண்டும்."



" அடடா!" என்றது காகம். “இந்த வால் மோசமான நிலையில் உள்ளது. இதை உடனே கவனிக்கணும்."

" முட்டாளே , ரோமத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ?" என்று கேட்டு, நரி கதவைச் சாத்தி அறைந்து மூடியது.



கரடியும் அதன் நண்பர்களும் தங்கள் அடுத்த நகர்வைத் திட்டமிட கரடியின் குகைக்குத் திரும்பினர்.






சில மணி நேரம் கழித்து , விடியற்காலையில் , கரடி மீண்டும் நரியின் குகைக்கு முன்னால் இருந்தது. இந்த முறை, தனியாக.

" நான் என் வாலை அழகுபடுத்த வந்திருக்கிறேன் ," என்று கரடி கூப்பிட்டது.

" என்ன ?" தூக்கத்தில் இருந்த நரி கேட்டது. “நீ எப்போ வேணாலும் வந்து என்னை தொந்திரவு செய்ய முடியாது!"

" நான் உன்னை பார்க்க வரவில்லை. என் வாலை சீவ வந்திருக்கேன். என்னை உள்ளே விடு."

" சரி , சரி ," நரி தயக்கத்துடன் சொன்னது. "ஆனால் நீ செய்ய வேண்டியதை விரைவாகச்செய்."



கரடி நேரத்தை வீணாக்காமல், நரியை இருக்கையில் அமரச்செய்து வேலையைத் தொடங்கியது.





நரியின் வாலைக் துவைத்து, பிழிந்து, சீவிக்கொண்டே , கரடி 'தனது வால்' குறித்து வைத்திருக்கும் திட்டங்களைப் பற்றி தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருந்தது.





நான் அதை சுருட்டி, இளஞ்சிவப்பு நிற சாயம் பூசுவேன். பின்னர் அதை ரிப்பன்கள் மற்றும் கிளிப்புகளால் அலங்கரிப்பேன். பின்னர் இலையுதிர்காலத்தில் அதை முழுமையாக வெட்டுவேன், அந்த முடியைக்கொண்டு இலையுதிர்காலத்தில் தூங்குவதற்கு ஒரு மென்மையான தலையணையை உருவாக்க முடியும்."





" நீ அப்படி எதுவும் செய்யமுடியாது,"
என்று நரி இருக்கையிலிருந்து குதித்து எழுந்தது.

" இந்தா உன் தேன். நம் ஒப்பந்தம் முடிந்தது!"



" இல்லை ," கரடி சொன்னது.

"ஒரு முட்டாள் மட்டுமே இவ்வளவு அழகான வாலை அரை புட்டி தேனுக்கு வியாபாரம் செய்வான்."

" சரி, உனக்கு வேறு என்ன வேண்டும் ?" என்று நரி கேட்டது.

" தேனைத் தவிர, எனக்கு நல்ல சீஸ் , ஒரு பை செஸ்ட்நட்கள் பழுத்த இனிப்பான திராட்சையும் வேண்டும்.

" இது முட்டாள்தனம்" நரி கத்தியது.


" அப்போ எனக்கு இப்போதே என் வால் வேண்டும் !" என்றது கரடி.



“நல்லது. உன் வாலை தரேன், ஆனால் நீ கொஞ்ச நேரம் வெளியில் இருக்கணும். இது ஒரு தீவிர அறுவைசிகிச்சை.” என்றது நரி.



“உனக்கு பத்து நிமிஷங்கள் தரேன். ஆனால், எந்த தந்திரமும் செய்யக்கூடாது.” என்றது கரடி.
கரடி பொறுமையாக வெளியில் காத்திருந்தது, திடீரென்று கதவு வழியாக கதறல் சத்தம் கேட்டது.





கொஞ்ச நேரம் கழித்து நரி இடுப்பில் ஒரு துண்டை சுற்றிக்கொண்டு நொண்டிக் கொண்டே வந்தது. கையில் இருந்த வாலை நீட்டியது.
“உண்மையிலேயே வெட்டிட்டியா?” பயத்துடன் கரடி கேட்டது.
“அது தானே உனக்கு வேணும்?” கேட்டது நரி.
“ஆமாம். ஆனால், இது பயங்கரமா பழைய துடைப்பம் போல இருக்கு.” என்றது கரடி.
“வாலை வெட்டினால் அப்படி தான் இருக்கும்” என்ற நரி, அதை கரடியின் காலடியில் வீசியது.



நரி உள்ளே செல்லத் திரும்பியவுடன் , சுற்றப்பட்டிருந்த துண்டு அவிழ்ந்தது.

துண்டு கீழே விழுந்தது, அதன் உண்மையான வால் வெளியே வந்தது.

" பொய்யன் , அது வெறும் துடைப்பம்."

இதைச் சொல்லிவிட்டு, கரடி நரியின் உண்மையான வாலைப் பிடித்தது.





" கருணை காட்டு! விட்டுவிடு!" என்று நரி கெஞ்சியது.

"நான் சும்மா கேலி செய்தேன். நீ கேட்டதையெல்லாம் நான் உனக்குக் கொடுப்பேன் . என் வாலைக்கூட நீ அணிய அனுமதிப்பேன். ஆனால் ஒரே ஒரு முறைதான்," என்று நரி மேலும் கூறியது.

கரடியின் நண்பர்கள் ஆற்றங்கரையில் காத்திருந்து, அதற்கு ஏன் இவ்வளவு நேரம் ஆகிறது என்று யோசித்தனர். இறுதியாக, அழகான வாலுடன் கரடி தோன்றியது .





" ஏய், அவன் உண்மையிலேயே தன் வாலை உனக்குக் கொடுத்தானா ?" காகம் ஆச்சரியப்பட்டுக் கேட்டது.

" அவன் நம்மிடமிருந்து எடுத்த அனைத்தையும் ," என்று கரடி சொன்னது.


" ஆனால் நீ இதை எப்படிச் செய்தாய் ?" என்று முயல் கேட்டது.

" உங்கள் உதவியுடன் ," கரடி சொன்னது. "இப்போது நாம் அனைவரும் ஒரு சுற்றுலா செல்வோம்."

" ஒருவேளை நரியையும் அழைத்திருக்கலாமோ " என்றது கழுதை.

" அதற்கு அவசியமில்லை ," என்றது கரடி.

தன் ஜாக்கெட்டைக் கழற்றியது – அங்கே நரி இருந்தது.





, நரி ஒரு வார்த்தையும் பேசாமல் கரடியின் முதுகிலிருந்து நழுவி ஓடிப்போனது , மீண்டும் காட்டின் அந்தப் பகுதியில் அதைக் காணவில்லை.



நரி கதை

எழுதி விளக்கியவர்: யோசி அபோலாஃபியா

மொழிபெயர்ப்பு: பூர்வா யாக்னிக் குஷ்வாஹா

நரியின் வால் விற்பனைக்கு உள்ளது , நரி அப்படித்தான் சொன்னது.

" உன் பாதி காலியான தேன் பாட்டிலுக்கு ஈடாக என் அழகான அடர்ந்த வாலை உனக்குத் தருகிறேன் ," என்று நரி கரடியிடம் சொன்னது.

கண் இமைக்கும் நேரத்தில், அது கரடியின் தேனுடன் மறைந்துவிட்டது. நரி ஏற்கனவே காகத்தின் சீஸ் , முயலின் இனிப்பு திராட்சை மற்றும் கழுதையின் செஸ்ட்நட்களைத் திருடிவிட்டிருந்தது. இப்போது அனைத்து விலங்குகளும் தந்திரமான நரிக்கு ஒரு பாடம் கற்பிக்க முடிவு செய்தன.

ஆனால் அவர்களால் அந்த புத்திசாலி நரியை வெல்ல முடியுமா ?

யோசி அபோலாஃபியா பல குழந்தைகள் புத்தகங்களின் ஆசிரியர் மற்றும் ஓவியர் ஆவார். அவர் தனது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் ஜெருசலேமில் வசிக்கிறார்.